Faculty of Islamic Studies & Arabic Language
South Eastern University of Sri Lanka

# Proceedings of the First International Symposium - 2014

On

"TOWARDS THE INTEGRATION OF ISLAMIC KNOWLEDGE WITH HUMAN SCIENCES

PUBLISHED BY

FACULTY OF ISLAMIC STUDIES & ARABIC LANGUAGE
SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA
UNIVERSITY PARK
OLUVIL 32360
SRI LANKA

**Faculty of Islamic Studies & Arabic Language (FIA)**
**South Eastern University of Sri Lanka (SEUSL)**
**University Park**
**Oluvil, 32360**

**Phone: - +94672255127**
**Fax : - +94672255127**

www.seu.ac.lk/fia

**ISBN: - 978-955-627-047-1**

**Copyright:-**

**© Faculty of Islamic Studies & Arabic Language, South Eastern University of Sri Lanka**

**Disclaimer:-**

*All rights reserved. No part of this proceedings may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording or by any information storage and retrieval system, without written permission from the authors, except for the inclusion of brief quotations in a review. The material in this publication has been supplied by the authors, and only minor copy editing, if relevant, has been done by the FIA, SEUSL. The views expressed remind the responsibility of the named authors and do not necessarily reflect those of the FIA, SEUSL.*

**Compiled By:-**

Mr. MHA. Munas
Dr. MIM. Jazeel

**Editorial Board:-**

Mr. ABM. Aliyar
Mr. MHA. Munas
Dr. MIM. Jazeel
Mr. AM. Razik
Mr. FHA. Shibly
Mr. HMA. Hilmy
Mrs. Rifa Mahroof

**Page Settings:-**

Mr. SI. Nimisth
Mr. MIM. Irfan

05th January 2014

**Printed By:-**

Newrichoffset Printers, Akkaraippattu

# The ancient Mosques in Jaffna

## யாழ்ப்பாணத்தின் பழமை வாய்ந்த இஸ்லாமியப் பள்ளிகள்

**Mrs. Shanthini Arulanantham**

Senior Lecturer. Dept of History, University of Jaffna

### ஆய்வின் நோக்கம்

இலங்கை வரலாற்று மூலங்களில் பண்டு தொட்டு தனித்துவமான பிராந்தியமாக அடையாளப்படுத்தப்பட்டு வந்துள்ள யாழ்ப்பாணம் 15ஆம் நூற்றாண்டுக்கு முன்பு பாளி இலக்கியங்களில் நாகதீபம், உத்தரதேசம் எனவும், தமிழில் நாகநாடு எனவும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. இப்பிராந்தியத்தில் பல்வேறு இன, மத, பண்பாட்டு மக்கள் வாழ்ந்து வந்ததைப் பல்வேறு சான்றுகளும் எடுத்துக் காட்டுகின்றன. இப்பிராந்தியத்துடன் நீண்டகாலமாக வடஇந்திய, தென்னிந்திய, கிரேக்க, உரோம, அராபிய, சீன நாடுகள் வணிக, கலாசார உறவுளைக் கொண்டிருந்தமைக்கு நம்பகரமான ஆதாரங்கள் காணப்படுகின்றன. தற்காலத்தில் யாழ்ப்பாணத்தில் தமிழர், இஸ்லாமியர் முக்கிய இனங்களாக வாழ்ந்து வந்தாலும் தமிழரின் வரலாறு பண்பாடு பற்றி ஆராய்ந்த அளவிற்கு இஸ்லாமியரது வரலாறு, பண்பாடு பற்றி ஆராயப்படவில்லை என்றே கூறலாம்.

மதரீதியில் தமிழரும் இஸ்லாமியரும் வேறுபட்டு நின்றாலும் பண்பாட்டு அடிப்படையில் ஒற்றுமையுடையவர்களாக விளங்கி வருகினறனர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை நீண்டகாலமாக தமிழ்மக்களுடன் தொடர்புடையவர்களாக இஸ்லாமியர் வாழ்ந்து வந்தனர். சிறப்பாக இஸ்லாமியர் சமய மொழியாக அரபு

மொழியினைக் கொண்டிருந்த போதும் தமது தொடர்பாடல் மொழியாகத் தமிழையே கொண்டுள்ளனர். மேலும் யாழ்ப்பாணத்தின் இந்துக் கட்டிடக்கலையில் இஸ்லாமியச் செல்வாக்கும், இஸ்லாமியக் கட்டிடக் கலையில் இந்துச் செல்வாக்கும் காணப்படுவது பிரதான அம்சமாகும். பொதுவாக இஸ்லாமிய பள்ளிவாசல் கட்டிடக் கலையானது எந்தெந்த நாடுகளில் பரவியதோ அந்நாடுகளில் உள்ள கலையம்சங்களில் சிலவற்றை உள்வாங்கியுள்ளது. உதாரணமாக சீனாவில் பள்ளிவாசல்கள் அமைக்கப்பட்ட போது அவை அராபிய நாட்டுப் பள்ளிவாசல்களை விட சற்று வேறுபடுத்தப்பட்ட வகையில் நிறுவப்பட்டது. யாழ்ப்பாணத்திலும் இஸ்லாமியப் பள்ளிவாசல்களில் சில மாற்றங்களைக் காணமுடிகின்றது. யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட இஸ்லாமியர் குடியேறிய வரலாற்றை ஆராய்வதாகும். இஸ்லாம் மதம் தோன்ற முன்னரே மேற்காசியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலே தமிழ்மொழி பேசும் இஸ்லாமியர் குடியேறுவதற்கு முன்னரே உறவுகள் இருந்ததைத் தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இஸ்லாமிய சமயம் கி.பி 6ஆம் நூற்றாண்டில் அரேபியாவில் முஹமது நபி அவர்களால் தோற்றுவிக்கப்பட்டு, 23படிப்படியாக எழுச்சி பெற்றது. இஸ்லாமிய இனத்தவரின் மூதாதையரான அராபியர் வணிகர்களாகவும், ஆட்சியாளர்களாகவும் வட இந்தியாவுக்குள் ஊடுருவி, குஜராத் ஊடாக கேரளாவின் காயல் பட்டினத்தில் குடியேறி, திருமண உறவால் தமிழ் மொழி பேசும் இஸ்லாமியராக மாறிய பின்னரே குறிப்பாக கி.பி 8ஆம் நூற்றாண்டிலிருந்தே யாழ்ப்பாணத்துக்கும் இஸ்லாமியருக்கும் நெருங்கிய உறவு ஏற்பட்டதென்பதைச் சான்றுகள் புலப்படுத்துகின்றன. இதனை வரலாற்று இலக்கியங்களும், 9 ஆம், 10 ஆம் நூற்றாண்டுக்குரிய தொல்லியல் எச்சங்களும் உறுதி செய்கின்றன. சோழர்கள் தென்னிந்தியாவை மையப்படுத்தி, பேரரசை விஸ்தரிக்க முற்பட்ட போது இந்துசமுத்திரப் பொருளாதாரத் தளங்களைக் கையகப்படுத்த முனைந்தனர். ஆச்சமயத்தில் அதற்குத் தடையாக முஸ்லிம்களே விளங்கியதாகக் கூறப்படுவதும் நினைவிற் கொள்ளத்தக்கது. 12ஆம் நூற்றாண்டில் ஆசியப் பொருட்களை ஐரோப்பாவுக்கு ஏற்றுமதி செய்வது முஸ்லிம் வர்த்தகர் கைகளிலே இருந்தது. இத்தகைய நிலையில் இஸ்லாமிய வர்த்தகரின் செல்வாக்கு யாழ்பாணத்தில் அதிகரித்திரும் என கருதலாம். யாழ்ப்பாண அரசு காலத்தில் நெருக்கமான உறவுகள் ஏற்பட்டிருந்ததை யாழ்ப்பாண அரசு தொடர்பான தமிழ் இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இந்த உறவுக்கு இஸ்லாமியர் வணிகராக மட்டுமன்றி யாழ்ப்பாண அரசனைப் பாதுகாக்கும் படைவீரர்களாகவும் கடமையாற்றியே முக்கிய காரணமாகும். இவர்கள் வட ஆபிரிக்கா, குஜராத், மதுரை, இராமேஸ்வரம் ஆகிய இடங்களிலிருந்து வருகை தந்தமை குறிப்பிடத்தக்கது. வட ஆபிரிக்காவில் இஸ்லாமியர்களாக மாறியவர்கள் யாழ்ப்பாணத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தனர்

என்பதை அண்மைக் கால ஆய்வுகள் வெளிப்படுத்தியுள்ளன. நயினாதீவு "பப்புரவ தேசம்" எனக் குறிப்பிடப்பட்டதாக பேராசியர் புஸ்பரட்னம் எடுத்துக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எந்தவொரு இனத்தவரும் தாம் குடியேறிய இடங்களில் தமது சமயம் சார்ந்த வழிபாட்டிடங்களை அமைத்து தமது நிலையை ஸ்திரப்படுத்தியுள்ளமையை வரலாற்றில் அவதனிக்கலாம். அவ்வகையில் இலங்கையில் குடியேறிய இஸ்லாமியர் தாம் குடியேறிய இடங்கள் சிலவற்றில் தமது வழிபாட்டுத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வழிபாட்டுத் தலங்களை அமைத்தனர். இவர்களது வழிபாட்டிடம் அராபிய மொழியில் மசூதி எனப்பட்டது. தமிழில் பள்ளிவாசல் என்றழைக்கப்பட்டது. இலங்கையின் பல பாகங்களிலும் இஸ்லாமியர்களது குடியேற்றங்கள் அமைக்கபட்டாலும் கிழக்கில் பெரும்பான்மையாகவும் தெற்கு வடக்கில் குறிப்பிடத்தக்களவிலும் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. வடக்கில் ஏற்பட்ட இஸ்லாமியர் குடியேற்றம் பற்றிய செய்திகளை யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றன.

."அக்காலத்திலே சந்தச்சாய்பு என்பவனால் மகம்மது மார்க்கத்தவர்களாக்கப்பட்ட தமிழ் வமிசத்தவர்களான சில சோனகக் குடிகள் காயல் பட்டணம் முதலிய இடங்களிலிருந்து வந்து தென் மிருசுவில் என்னும் ஊரிலே குடியிருந்து சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாள், முகாவில் என்னும் இடங்களிலுள்ள சந்தைகளில் வியாபாரம் பண்ணிக் கொண்டு தாங்களிருந்ததென மிருசுவிலுக்கு உசனென்று பெயருமிட்டார்கள்".

இஸ்லாமியர்களைச் சோனகர் என்றே அந்நூல் சுட்டுவது கவனிக்கத்தக்கது. அத்துடன் தென்மராட்சிப் பகுதியிலேயே இவர்கள் முதலில் குடியேறினார்கள் என்பதையும் இவ்வினத்தவர் அப்பிராந்திய வர்த்தகத்தில் செல்வாக்குப் பெற்றிருந்ததையும் அவதானிக்க முடியும்.. அதேவேளை தாம் குடியிருந்த இடத்திற்கு தமது இனத்தை அடையாளப்படுத்தும் பெயரொன்றினைச் சூட்டுமளவுக்குச் செல்வக்குப் பெற்றிருந்ததையும் கண்டு கொள்ளமுடிகின்றது. காலப்போக்கில் யாழ்ப்பாணத்தை அண்டியுள்ள தீவுப்பகதிகளிலும் இவ்வினத்தவரது செல்வாக்குப் பரவியிருந்தமைக்குத் தொல்லியற் சான்றுகள் கிடைக்கப் பெற்றுள்ளன

16 ஆம் நூற்றாண்டினை அடுத்து போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் போன்ற ஐரோப்பிய இனத்தவர்கள் மேற்காசிய, கிழக்காசிய, இந்துசமுத்திர வணிகத்தில் மேலாண்மை பெற முற்பட்ட வேளையில் இஸ்லாமிய வணிகரே பெரும் சவாலாக இருந்தனர். இலங்கையில் ஆதிக்கத்தை நிலைநாட்டியப பின்னர் இஸ்லாமியர் பொருளாதார ரீதியாக மட்டுமன்றி பண்பாட்டு ரீதியிலும் ஒடுக்கப்பட்டனர். குறிப்பாக இவர்களின் பண்பாட்டு மையங்களான பள்ளிவாசல்கள் அழிக்கப்பட்டன. இலங்கையிலிருந்த படைவீரர்களான கேரளர், கன்னடர், தெலுங்கர், இஸ்லாமியர் போன்றோரை சேவகர்களாக்கிய போது இங்கிருந்த இஸ்லாமியர் வணிக நடவடிக்கைகளில் இருந்து விலகி விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளில் ஈடுபட்டனர். ஒல்லாந்தர் கால ஆவணங்கள் யாழ்ப்பாணத்தில் 160 இஸ்லாமிய குடும்பங்கள் இருந்ததாகவும், இஸ்லாமியரில் ஒரு பிரிவினரான பப்புருவர் குடும்பங்கள் 90 வரையில் இருந்ததாகவும் அறியத் தருகின்றன. ஒல்லாந்தரது ஆட்சியின் பிற்பகுதியில் சுதந்திரம் அளிக்கப்பட்ட பின் அமைக்கப்பட்டவையே யாழ்ப்பாணத்தின் பிற்காலப் பள்ளிவாசல்களாகும். தமிழ்மொழி பேசும் இஸ்லாமியர் குடியேறிய வரலாற்றை ஆராயும் அதேவேளை யாழ்ப்பாணத்தில் அவர்கள் குடியேறிய இடங்களில் அமைக்கப்பட்ட பழைய பள்ளிவாசல்களையும் எடுத்துக் காட்டுவதே இவ்வாய்வின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

## உசாத்துணை நூல்கள்


1. மயில்வாகனப் புலவர்.,(பதிப்பு),1949 யாழ்ப்பாண வைபவ மாலை, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்
2. முத்துக்கவிராயர்.1939 கைலாயமாலை,சாந்தி அச்சகம்,சென்னை.
3. பாலசுந்தரம்., 2002, இடப்பெயர் ஆய்வு, ரொரண்டோ.
4. Baldeaus ,Phillipus ,1959 True and exact Description of the great
5. Island of Ceylon, Royal Aisatic Society-Ceylon Branch, Ceylon.
6. Rugupathy.P.,1987 Early settlements in Jaffna,Sutharson graphic, Madras.
7. Begley,Vimala.,1971, Report of kantharoddai excavation.
8. Abeyasinghe ,Tikiri.,1986, Jaffna under the Portuguese,Lake House Invesment Ltd, Colombo.